## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.க.மணிராஜ், இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திட்டம்–4, மதுரை மாவட்டம் – இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந1) துறை

அரசாணை (ப) எண்.129

நாள். 24.10.2020
சார்வரி, ஐப்பசி 8,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. சமூக நல ஆணையரின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.25243/ நிர்4(3)/2017, நாள் 10.12.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
4. சமூக நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.36011/நிர்4(3)/ 2019, நாள் 26.06.2020.

*******

ஆணை

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த திரு.கோ.கணபதி என்பவர் 31.03.2013 அன்று பணியிடை மரணமடைந்ததால், அன்னாரது வாரிசான திரு.க.மணிராஜ் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 04.07.2013 அன்று விண்ணப்பம் அளித்ததைத் தொடர்ந்து, இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றிதழ், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்பதற்கான சான்றிதழ், திரு.க.மணிராஜ் அவர்களின் கல்வித் தகுதி மற்றும் தனியரின் பிறந்த தேதி 29.01.1992 என்பதற்கான சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களை ஆய்வு செய்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளில் கருணை அடிப்படையில் தனியருக்கு மதுரை மாவட்டம், திட்டம்–4, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணியிடம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் அப்பணியிடத்தில் 21.12.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவித்து, மதுரை மாவட்டம், திட்டம்–4, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.க.மணிராஜ் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 21.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, அப்பதவியில் வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறுவது கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த போது பணியிடை மரணமடைந்த திரு.கோ.கணபதி என்பவரின் வாரிசும் மகனுமான திரு.க.மணிராஜ், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சமூக நலத் துறையில், இளநிலை உதவியாளராக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி கருணை அடிப்படையில் தனியர் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 21.12.2018 முற்பகல் முதல் கருணை அடிப்படையில் முறையாக பணியமர்த்த தேவையான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. திரு.க.மணிராஜ், இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திட்டம்–4, மதுரை மாவட்டம் அவர்களின் பணியானது இளநிலை உதவியாளர் பதவியில் 21.12.2018 முற்பகல் முதல் முன் தேதியிட்டு வரன்முறைப்படுத்தப்படுவதால் கிடைக்கக் கூடிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதரப் படிகள், நிலுவைத் தொகை ஏதேனுமிருப்பின் அதனைப் பெறுவதற்கு தனியர் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.15195/ட்டி.1/2020, நாள் 09.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.26337/ஜி1/2020–1, நாள் 19.10.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.மதுமதி,
அரசு செயலாளர்.

பெறுநர்
திரு.க.மணிராஜ்,
இளநிலை உதவியாளர்,
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம்,
திட்டம்–4, மதுரை மாவட்டம்,
(சமூக நல ஆணையர், சென்னை–15 வழியாக).
சமூக நல ஆணையர், சென்னை–15.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை மாவட்டம்.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி1) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ந.க.எண். 36011/நிரு4(3)/19, நாள்: .11.20
அரசாணை சார்பு செய்யப்படுகிறது.
சமூகநல ஆணையரகம், சென்னை-15

பிரிவு அலுவலர்
29.10.2020

பெறுநர்:
திரு. க. மணிராஜ்
இளநிலை உதவியாளர்
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம்
திட்டம்-4, மதுரை (உரிய அலுவலர் மூலமாக)

கூடுதல் இயக்குநர்,
சமூக நல இயக்குநரகம்,